பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் உள்ள விளம்பரப் பலகைகள் மூலம் வருமானம்.

*வினா எண். 492—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் விளம்பரப்பலகை மூலமாக போக்குவரத்துக் கழகத்திற்கு சென்ற ஆண்டு கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) மற்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இந்த முறை நடைமுறையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ரூபாய் 700 (எழுநூறு மட்டும்).

(ஆ) பாண்டியன் போக்குவரத்துக்கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக்கழகம் ஆகியவைகளில் இம்முறை நடைமுறையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களில் விளம்பரம் மூலம் வருமானத்தைப் பெருக்குவது நடைமுறையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்து கழகத்தின் மூலம் 700 ரூபாய் தான் வருமானம் வருகிறது என்றும் சொன்னார்கள். விளம்பரம் அதிகமாக எதிர்பார்க்கக்கூடிய சென்னை நகரில் ஏன் இந்த அளவு வருமானம் குறைந்திருக்கிறது? அதிகமான விளம்பரத்தின் மூலம் வருமானத்தை பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இப்போது ஓடிக்கொண்டிருக்கிற அத்தனை பேருந்துகளும் புதிய பேருந்துகள். இந்த புதிய பேருந்துகளில் விளம்பரத்திற்காக பலகை அடிப்பதன் மூலமாகவோ அல்லது அதற்கு வர்ணங்களைப் பூசுவதன் மூலமாகவோ அந்த பேருந்துகளில் கவர்ச்சி கெட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலே அதை இப்போது நிறுத்தி வைத்திருக்கிறோம். பழைய வண்டிகளிலே மாத்திரம் நடைமுறையிலே வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது டீசல் விலை உயர்வின் காரணமாகவும், மற்ற நஷ்டங்களை எல்லாம் பார்க்கிறபோது கொஞ்சம் கவர்ச்சி குறைந்தாலும் பரவாயில்லை. இதை நடைமுறைப் படுத்தலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.